செய்தி வெளியீடு நாள் : 24.11.2025

**பெரம்பூர் சட்டமன்ற தொகுதி, வியாசர்பாடி, டாக்டர் அம்பேத்கார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேருந்து நிறுத்தத்தை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் "புதிய குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம்"அமைப்பதற்கான பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தொடங்கி வைத்து, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்தார்.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (24.11.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்**, பெரம்பூர் சட்டமன்ற தொகுதி, வியாசர்பாடி, டாக்டர் அம்பேத்கார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி எதிரிலுள்ள பேருந்து நிறுத்தத்தை வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் **புதிய குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம்** அமைப்பதற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, முல்லை நகர், சென்ட்ரல் அவென்யூ சாலை **புதிய சமுதாய நலக்கூடம்**, எருக்கஞ்சேரியில் கட்டப்பட்டு வரும் **முதல்வர் படைப்பகம்** மற்றும் மகாகவி பாரதியார் நகர், மசூதி தெருவில் கட்டப்பட்டு வரும் **முதல்வர் படைப்பகத்தின்** முன்னேற்றப் பணிகளை துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திரு.நேதாஜி யூ.கணேசன், நிலைக் குழுத்தலைவர் (வரிவிதிப்பு மற்றும் நிதி) திருமதி.சர்வஜெயா தாஸ் நரேந்திரன், சிஎம்டிஏ தலைமை பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.இந்துமதி, இணை இயக்குநர் (பொது நூலகம்) திரு.இளங்கோ சந்திரகுமார் கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.மா.பாலமுருகன், திரு.ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர் திரு.ஜெ.டில்லி பாபு, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

Verified RealEstate ™